### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!
### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கைகாட்டுபவரே பிரதமராவார்!

## சிவகங்கை பொதுக்கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

*சிவகங்கை. பிப்ரவரி 19*

சிவகங்கை பாராளுமன்ற தொகுதி சார்பில் திருப்பத்தூர் தொகுதி என்.. வைரவன் பட்டியல் முதல்வர் உத்தரவின் பேரில் ஸ்டாலினின் உரிமை குரல் பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும் என்ற தலைப்பிலான நாடாளுமன்ற தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டம் சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்றுப் பேசினார்.

இந்த பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு கழக துணை செயலாளரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசியதாவது .

விரைவில் பாராளுமன்றத் தேர்தல் வரவுள்ளது. நமக்கு தேர்தல் களத்தில் தெரிவது எந்த இயக்கமும் அல்ல.கழகம் மட்டும்தான். பா.ஜ.க. தமிழ்நாட்டில் எவ்விதத்திலும் காலூன்ற முடியாது. நமது கழகம் தான் நமது கண்ணுக்கு தெரிகின்றது. கழககூட்டணி வேட்பாளர்கள் தான் தெரிகிறார்கள். 2019 தேர்தலில் 39 இடங்களில் வெற்றி பெற்றோம்.இப்போது புதுவைஉட்பட 40 தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும்.. தலைவர் ஸ்டாலினின் உரிமைக் குரல் நாடு முழுவதும் ஒலித்திட வேண்டும்.இந்தியாவில் எந்த கட்சியும் தேர்தல் பிரச்சாரத்தை துவங்கவில்லை. தலைவர் முதல்வர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தினை துவங்கிவிட்டார்.

இந்தியாவிற்கே வழி காட்டிடும் வகையில் தலைவர் கலைஞர் அவர்கள் செயல்பட்டு வந்தார். ஜன நாயகத் திற்கு ஆபத்து வந்த போதெல்லாம் முதலில் குரல் கொடுத்தவர் தலைவர் கலைஞர்ஆவார். தலைவர் கலைஞர் என்ன சொல்கிறார் என்று தேசிய அரசியல் தலைவர்கள் பலர் எதிர்பார்த்தார் கள். ஜனநாயகம் நசுக்கப்பட்ட போதெல்லாம் அதை எதிர்த்துஜனநாயகத்தை காப்பாற்றியவர் தலைவர் கலைஞர். அவரது வழியில் நம்முடைய முதல்வர் அவர்கள்

ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக அயராது பாடுபட்டு வருகிறார். மோடி ஆட்சியினால் ஜனநாயகம்அழிக்கப்பட்டு வருகிறது. மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மாநில உரிமைகள் பறிபோகும் . மொழிக்கு ஆபத்து ஏற்படும். நாட்டிற்கே ஆபத்து ஏற்படும். ஒன்றிய அரசு மாநில அரசின் ஒவ்வொரு உரிமைகளையும் பறித்து வருகிறது. நீட் தேர்வு எதிர்ப்பு மசோதா கடந்த ஓராண்டுக ளுக்கு மேலாக ஆளுநரால் கிடப்பில் போடப்பட்டுள். இது போல் பல்வேறு மசோதாக்கள் ஆளுநரிடம்உள்ளது. இந்த மசோதாக்களை இன்னும் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறார்.உச்சநீதிமன்றம் மசோதாக்களை பரிசிலித்து உரிய முடிவை எடுக்குமாறு உத்தரவிட்டும் இன்னும் பரிசீலனையில் உள்ளது.

இந்தியாவில் தற்போது மக்களாட்சி இல்லை!

நமது மாநிலத்திற்கு ஒன்றிய அரசினால் வரும் நிதியளவு மிகவும் குறைவாக உள்ளது. ஆனால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு வாரி தரப்படுகிறது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன் உச்ச நீதிமன்றத்தில ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு கட்சிநிதிக்காக

வங்கி மூலம் பத்திரம் பெறுவது குறித்து சரியான தீர்ப்பை கூறியுள்ளார்கள். அதிக அளவில் பா.ஜ.க. பத்திரங்களை வாங்கி உள்ளது. இது மிகப்பெரிய ஊழல் மோசடியாகும் தற்பொழுது மக்களுக்கான ஆட்சி நடைபெறவில்லை. கார்ப ரேட்கம்பெனிக்கான ஆட்சிதான் நடைபெறுகிறது . முந்தைய காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்காக. ருபாய் 90 ஆயிரம் கோடி நிதி தரப்பட்டது. தற்பொழுது மோடி அரசு ரூபாய் 60 ஆயிரம் கோடி நிதியை தந்துள்ளது.அதையும். மற்றமுறையாக தருவதில்லை .தொடர்ந்து பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு. ஒன்றிய அரசின் நிதிபகிர்வு குறைவாகவே உள்ளது. மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வரும் என்று கருத்துக்கணிப்புகள் கூறப்படுகிறது .இதுதவறானதாகும். தென் மாநிலங்களான மகாராஷ்டிரா ,தமிழகம், கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, மேற்கு வங்கா ளம் ஆகிய மாநிலங்களில் இண்டியா கூட்டணி அதிக அளவில் வெற்றி பெறும். வடமாநிலங்க. ளின் உத்தரபிரதேசம் உட்பட அதிக இடங்களில் வெற்றி பெறும். எனவே நமக்கு உதயசூரியனை தவிர வேறு எந்த சின்னமும் தெரியக்கூடாது.

பா.ஜக. ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை மகளிரின் சலுகைகள் பறிக்கப்படும். எனவே இதைகழகத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் வீடு வீடாக சென்றுமக்களிடம் எடுத்துக்கூற வேண்டும். நமக்குள் எந்த பிரிவினையும் கூடாது .கட்சியில் ஒற்றுமையுடன் செயல்பட. வேண்டும் தேர்தலில் நம்முடைய முதல்வர் தளபதி அவர்கள் யாரை கை காட்டுகிறாரோ அவர்தான் பிரதமராக அமர உள்ளார்.

தொடர்ந்து தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுகிறார்கள். படகுகள் பறிமுதல் செய்யப்படுகிறது . இதுகுறித்து முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். ஆனால் இதுவரை ஒன்றிய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. நமது முதல்வர் அவர்கள் தொடர்ந்து இதை வலியுறுத்தி வருகிறார். எய்ம்ஸ் மருத்துவமனை மதுரையில் கட்டுவதாக பா.ஜ.க . தேர்தலின்போது கூறி அடிக்கல் நாட்டியது.. அந்த ஒரு செங்கல்லை கூட இப்பொழுது காணப்பட வில்லை. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு நிதி இதுவரை தரப்பட வில்லை. மாநிலத்திற்கான நம்முடைய அதிகாரங்களையும் தொடர்ந்து குறைத்து வருகிறார்கள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோர் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற உரிமைகளை தொடர்ந்து முழக்கம் இட்டு அதற்காக போராடியும் வந்தார்கள். அதற்கான உரிமைகளையும் ஒன்றிய அரசிடமிருந்து போராடி பெற்று வந்தார்கள். அவர்களது வழியில் நம்முடைய முதல்வர் தலைவர் அவர்கள் தொடர்ந்து கொள்கை மாறாமல் இத்தகைய போராட்டங்களை நடத்தி வருகிறார். தேர்தல் வாக்குறுதி அனைத்தையும் நிறைவேற்றியுள்ளார் .மக்களின் முதல்வராக அவர்கள் அன்பைப் பெற்றவராக நமது முதல்வர் அவர்களது ஆட்சி நடைபெற்று வருகிறது. எனவே நமது கழகத் தொண்டர்கள் அனைவரும் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் அனைத்து இடங்களிலும் வெற்றிபெற தீவிரமாக பணியாற்ற வேண்டும். இப்பொழுதே நாம் தேர்தல் பணியினை தொடங்கி விட்டோம். .இதற்கான முதல் கூட்டம் தான் இந்த தேர்தல் பரப்புரை கூட்டம் .எனவே அனைவரும் இன்னும் இரண்டு மாதங்களுக்கு தேர்தல் பணியினை சுறுசுறுப்பாக செய்திட வேண்டும். இண்டியா கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேச்சு!

கூட்டத்திற்கு தலைமை வகித்த கூட்டுறவுத்துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட செயலாளருமான கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

மிக முக்கியமான நெருக்கடியான நேரத்தில் இந்த பொதுக்கூட்டம் நடைபெற்று வருகிறது நாடு ஒரு இக்கட்டான சூழ்நிலை உள்ளது எனவே பாஜக ஆட்சியில் நாம் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது ஒவ்வொருவரும் பொறுப்புடன் உணர்ந்து தேர்தல் பணியை மேற்கொள்ள வேண்டும் கூட்டணி எப்படி வருகிறது யார் வேட்பாளர் என்பதை பற்றி எல்லாம் நமக்கு கவலை வேண்டாம் பிரதமர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது அதையே நாம் உறுதியாக எடுத்து தேர்தல் பணி ஆற்ற வேண்டும் கூட்டணி வேட்பாளர் குறித்து தளபதி அவர்கள் முடிவு செய்து கொள்வார்கள் இந்தியாவிற்கே வழி காட்டும் தலைவராக முதல்வர் தளபதி அவர்கள் விளங்கி வருகிறார் அவர் செயல்பாட்டினை அனைவரும் எதிர்நோக்கி உள்ளார்கள் முன்பு தலைவர் கலைஞர் அவர்கள் அகில இந்திய அரசியலில் முக்கிய பணியாற்றிய பொழுது தேசிய அரசியலுக்கு வருமாறு கூறினார்கள் ஆனால் அதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் எனது உயரம் எனக்கு தெரியும் நான் தமிழ்நாட்டை விட்டு வர மாட்டேன் என்று பெருமையுடன் கூறினார். எந்த சூழ்நிலையிலும் தமிழகத்தை விட்டு தலைவர் கலைஞர் அவர்கள் சென்றதில்லை குரல் கொடுத்து போராடியவர் நெருக்கமாக இருந்த காலத்திலும் அதை முதலில் ஏற்றவர் அதற்காக ஆட்சியை பறி கொடுத்தவர் அதேபோல் இலங்கை பிரச்சினையில் ஆட்சியை இழந்தவர் தமிழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பல்வேறு பணிகளை செய்தார் பிரதமர் இந்திரா காந்தியுடன் தலைவர் கலைஞர் நெருக்கமாக இருந்த பொழுது நாட்டில் அவசரநிலை கொண்டு வந்த பொழுது500க்கும் மேற்பட்ட கழகத்தினர் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இதே போல் இலங்கை தமிழர் பிரச்சினைக்காக குரல் கொடுத்தற்காக ஆட்சி இழப்புஏற்பட்டது. ஆனால் அதைப் பற்றி எல்லாம் தலைவர் கவலைப்படவில்லை. கொள்கையிலிருந்து சிறிதும் மாறவில்லை. அ.தி.மு.க. ஆட்சிகாலத்தில் ஒன்றிய அரசிடம் அடிபணிந்தார்கள். மாநில உரிமைகள் அதை எதிர்க்கவில்லை.கொள்கை யற்ற கூடாரமாக அ.தி.மு.க.திகழ்கிறது தமிழகம் புதுவையில் 40இடங்களில் நாம் வெற்றி பெறவேண்டும்.மக்கள்விரோத ஆட்சி நடத்திய அ.தி.மு.க. பாஜ.கவின் பாசிச மக்கள் விரோதப் போக்கினை வீடு வீடாகச்சென்று மக்களிடம் எடுத்துக்கூறவேண்டும். பா.ஜ.க. அரசு எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. விலைவாசி உயர்வு, ஜி.எஸ்.டி. வரிப் பிரச்சினை , மாநிலங்களுக்கிடையில் ஒரவஞ்சகமாக செயல்படுவது உட்பட மக்களுக்கு எவ்வித நன்மையையும் பா.ஜ.க. செய்யவில்லை. இதை கழகத் தொண்டர்கள் மக்களிடம் விளக்கமாக எடுத்துக்கூற வேண்டும்..ஒன்றிய அரசு மூட்டைப்பூச்சி போல்செயல்படுகிறது.இதை நசுக்கும் வகையில் நாம் தேர்தல் பணிபுரிய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் .அமைச்சர்கள் எஸ் .ரகுபதி, சிவ.வீ. மெய்ய நாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் வி. பி. ராஜன், திருப்பத்தூர், செந்தில் காரைக்குடி, வழக்கறிஞர் தினேஷ் மானாமதுரை, கோவிந்த சாமி திருமயம், ஆகியோர் பேசினார்கள், முடிவில் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து நன்றி கூறினார்.

இந்த கூட்டத்தில் திருமயம் தொகுதி சார்பில் ஒன்றியச் செயலாளர்கள் பொன்.ராம லிங்கம், அழகு, அ.முத்து, அடைக்கலமணி ஆர். கணேசன், வி.ஆர்., இளையராஜா , பேரூர் கழகச் செயலாளர்கள் அ.அழகப்பன் நாசர் என்ற செந்தில்குமார் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி சார்பில் நிர்வாகிகள் கே. ஆர். கே. டி. தங்கமணி, அ,ரு.வடிவேல், கே .எஸ். ரவி, குமார் என்ற துரைக்கண்ணு, கே .சி.சிவகுமார் பழனிக்குமார் மற்றும் சிவகங்கை மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் கே.எஸ். எம்.மணிமுத்து, திருமதி ஜோன்ஸ்ரூசோ, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அ.முகம்மது, தா.ராமையா முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன் எஸ். மாரியப்பன் கென்னடி, ந,கர் கழகச் செயலாளர்கள் என். குணசேகரன் பெரி .பாலா, துரை. ஆனந்த், கா.பொன்னுச் சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதயகுமார், மெகா சேட் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, அம்பல முத்து, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பூமணி, கே. பாலசுப்பிரமணியன், பி. செல்வராஜ், எஸ். சண்முகவடிவேல், விராமதிமாணிக்கம், சுப.சின்னதுரை, கே .ஆர் . ஆனந்த், நாகனி ரவி, பூபாலசிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன், துரை.ராஜாமணி எம்.அண்ணா துரை, எம். ஜெயராமன், திருமலை முத்து ராமலிங் கம் ,யோக. கிருஷ்ணகுமார், வே.ஆரோக்கியசாமி ,ஆர். எம். கென்னடி, நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணி யன், எம். ஏ. கடம்ப சாமி ,வே.தமிழ்மாறன்,பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், கே. பி. எஸ். பழனியப்பன், நஜுமுதீன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார்,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,பேரூராட்சி மன்ற தலைவர்கள் திருமதி கோகிலராணி நாராயணன், திருமதி ராதிகா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், நிர்வாகிகள் முத்துக்குமார் சிவபுரிசேகர் , ஏ.எம்.கண்ணன், தொ.மு.ச.முரு கேசன், அண்ணாமலை, சேகர் பா. காளிமுத்து, மலைமேகு, தகவல் தொழில்நுட்ப அணி சுப.அன்பரசன், கண்ணன்,அலாவுதீன், மற்றும் 6 சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் பாக முகவர்கள், பி.எல்.சி அமைப்பாளர்கள் சார்புஅணிநிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.2.2024) முகாம் அலுவலகத்தில், விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆதவ் அர்ஜுனா சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### தாளடி நெற் பயிரைக் காப்பாற்ற

# 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட்ட முதல்வருக்கு நன்றி!

## நாகை மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*நாகை. பிப். 19 -*

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ். கே. வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர்.மணிவண்ணன் வரவேற்றார். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன் துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், எஸ்.பன்னீர்செல்வம், இல. பழனியப்பன், கோ.சிவக்குமார், உமாசெந்தாமரை, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், ஆர். டி.எஸ்.சரவணன், மகா. குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த் நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என்.கார்த்தி, எஸ். வி.டி.அருள், ப.உதயக்குமார், ஆர்.துரைராஜ், கேஸ் வீ.செந்தில், அ.பாரிபாலன், க.சத்தியமூர்த்தி, ஆர்.ஆர். குலோத்துங்கன், ஆர். சுரேந்தர், த.தமயந்தி, வ. கமல், எம்.தினேஷ்குமார், எஸ்.வெற்றிவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், ஜி.தாமோதரன், தி.கலையரசன், கே. சுரேஷ், எஸ்.டேனியல்சத்தியா மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை, வழக்கறிஞர் அணி சிங்கார வேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காவிரி டெல்டா மாவட்டமான நாகை மாவட்டத்தில் காலம் தவறி பெய்த மழையால் கால தாமதமான தாளடி இளம் பயிர்களுக்கு மேட்டூர் அணையில் இருந்து 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்பட்டு, தண்ணீர் கடைமடை வரை சென்று சேருகிறதா என்று கண்காணிக்க அதிகாரிகளை நியமித்து தண்ணீர் இன்றி வாடிய 100 சதவித தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து தாளடி நெற்பயிர்களை காப்பாற்றிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

முத்தமிழ் கலைஞர் அவர்கள் நன்மதிப்பை பெற்றவரும், இனமான பேராசிரியர் அவர்களின் நம்பிக்கைகுரியவரும், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அன்பைப் பெற்றவரும் சென்னை அறிவகம், அன்பகம், அண்ணா அறிவாலயம் என தொடர்ந்து கழக அலுவலகத்தில் துணை மேலாளராக பணிபுரிந்தவருமான என்.ஜெயக் குமார் அவர்கள் மறைவுக்கும், நாகை மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் மறைவுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

## தக்கலை தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.ரமேஷ்பாபு அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வழக்கறிஞர் **ச. சுந்தர் சிங்,** (81சி, வலியவீட்டு விளாகம், கப்பியறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் மாவட்டம் 604 408) அவர்கள் தக்கலை தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றி யக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர், தி.மு.க.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

## திருநெல்வேலி மாநகரம் 1 மற்றும் 15வது வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், தச்சநல்லூர் பகுதி, 1வது வட்டச் செயலாளர் பால்கட்டளை பே.முருகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஏ.முத்துராமன்,** (7, சீனியப்பன் திருத்து மேலத் தெரு, தச்சநல்லூர், திருநெல்வேலி) அவர்கள் 1வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

திருநெல்வேலி பேட்டை பகுதி, 15வது வட்டச் செயலாளர் முருகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **எம்.எஸ்.மணிகண்டன்,** (6ஏ, ராஜாஜிபுரம், திருநெல்வேலி டவுண்) அவர்கள் 15வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் கு தளபதி மு .க .ஸ்டாலின், அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கழக மூத்த முன்னோடிகள் மொழிப்போர் தியாகிகள் 1050 பேருக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொற்கிழி வழங்கி கழக முன்னோடிகளை கௌரவித்தார் நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜ கண்ணப்பன், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஏ என் இன்பா ரகு,மாநில மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ராஜீவ் காந்தி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே முருகவேல், கீழக்கரை நகர்மன்ற தலைவர் ஆபிதா துணைத்தலைவர் வழக்கறிஞர் ஹமீது சுல்தான், நகர் செயலாளர் பசீர் அஹமது, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்